[2009 ஜூலை 21

(உ) கடலூர் மாவட்டம், தீ விபத்துகளைத் தடுத்து பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் மற்றும் கான்கிரீட் விடுகள் வழங்குதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய காட்டுமன்னார்கோவில் தொகுதிக்குட்பட்ட கோட்டைமேடு பகுதியிலே 29 வீடுகள் தீக்கிரையானபோது, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே அதுகுறித்து முறையிட்டதும், அங்கே உயிரிழந்த சந்தான மேரி என்ற மூதாட்டியின் குடும்பத்திற்கு உடனடியாக ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு, அந்தத் தொகை இன்றைக்கு அவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது.

அதுபோலவே, இன்றைக்கு வானமாதேவி பகுதியிலே 49 வீடுகள், அருகில் இருக்கிற எணமங்கலத்திலே 82 வீடுகள், சாத்தமங்கலத்தில் 14 வீடுகள் என்று ஏராளமான வீடுகள் எரிந்து போன சம்பவத்தை நேற்றையதினம்கூட, மாண்புமிகு முதல்வரிடத்திலே நான் முறையிட்டுச் சொன்னேன். அங்கே வீட்டைப் பறிகொடுத்தவர்களுக்கு முழுமையாக, உடனடியாகத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் வைத்திருக்கின்றேன். குறிப்பாக, செங்கல்மேடு பகுதியிலே எரிந்த வீடுகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எழுத்துப்பூர்வமாகவும் முறையீடு ஒன்றை அளித்திருக்கின்றேன். தற்போது வீடுகள் எரிந்தால் கருணைத் தொகையாக 2,000 ரூபாய் உடனடியாக வழங்கப்படுகிறது. ஒரு வீட்டைப் புதுப்பித்துக் கட்டிக் கொள்வதற்கு அது போதுமானதாக இருக்காது என்பதால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைக் கருணையோடு பரிசீலித்து, அந்தத் தொகையை குறைந்தபட்சம் 5,000 ரூபாய் என்ற அளவிலே உயர்த்தி, உத்தரவிட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் வட்டாரத்தில் வீடுகள் எரிவதைப் பற்றி அ.தி.மு.க. உறுப்பினரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே திரு. ரவிக்குமார் அவர்களும் இங்கே